

# கல்யாணம்
## இன்பம் கொடுப்பதா?
## இன்பத்தை கெடுப்பதா?

# கல்யாணம்
## இன்பம் கொடுப்பதா? இன்பத்தை கெடுப்பதா?

வல்லிக்கண்ணன் எழுதியது

விலை 3 அணா.

பதிப்பாளர் :

எம். சூரி,

14-ஏ, குப்பையர் தெரு,

சென்னை-1.

கலையகம் வெளியீடு—9

முதற்பதிப்பு—ஏப்ரல், 1950

வல்லிக்கண்ணன்

எழுதியவை

| | | | |
|---|---|---|---|
| விடியுமா ? | 1 | 0 | 0 |
| ஒய்யாரி | 0 | 8 | 0 |
| அத்தை மகள் | 0 | 4 | 0 |

முத்துக்குமரன் அச்சகம், சென்னை-1

# கல்யாணம்

## இன்பம் கொடுப்பதா?

## இன்பத்தைக் கெடுப்பதா?

கல்யாணம் வாழ்வின் முக்கிய மலர்ச்சி. ஆணும் பெண்ணும் வாழ்க்கைப் பாதையில் ஜோடிசேர்ந்து போக இணைக்கப்படும் சந்தர்ப்பம்.

ஒரு ஆணுக்கு ஒரு பெண். அவர்கள் வாழ்வு முழுதும் சேர்ந்து வாழ்வதற்காக இணைத்து விடுவது மங்கல விழாவாகக் கருதப்படுகிறது. ஏன்?

வாழ்க்கைச் சந்தையிலே இந்தப் பெண்ணை இவன் தன் உரிமையாக, உடமையாகப் பெற்றுக் கொண்டிருக்கிறான் என்று விளம்பரப் படுத்துவதற்காகத் தான்.

பார்க்கப் போனால், கல்யாணம் என்பது ஆண் பெண் கூட்டு வியாபாரம் தான். அதன் விளம்பரமே கல்யாணச்சடங்குகள், ஊர்வலங்கள் எல்லாம். பெரிய பிஸினஸ்மேன் பெரிய பெரிய விளம்பரங்கள் செய்கிறான். சாதாரணப் பேர்வழி 'ஸிம்பிளா' முடிக்கிறான். இந்த வியாபார நியதி கல்யாணத்துக்கும் ஏற்கும்.

'அவள் அவனது உடமை. அவன் அவளுக்குச் சொந்தம். ஏ கல்யாணமாகாதவர்களே! பொதுவாக எல்லோருமே அறிந்து கொள்ளுங்கள். இனி அவன் மீதோ அவள் பேரிலோ வலை வீசாதீர்கள்!' என்று எச்சரிப்பது தான் கல்யாண விழா, ஊர்வலம், எல்லாமே!

சமுதாய வளர்ச்சியோடு அவசியமாகி விட்ட தேவை இது என்று கொள்ளலாம்.

உலக ஆரம்பத்திலே ஆணும் பெண்ணும் இஷ்டப் போல் கூடியிருந்திருக்கலாம் சிருஷ்டிப் போக்கில் ஆண்கள் அதிகமாகவோ, பெண்கள் அதிகமாகவோ, ஆகி நெருக்கடி விளைவிக்கும் போது, சில ஆண்களுக்கு மனைவியும், சில பெண்களுக்குப் புருஷனும் இல்லாமல் போயிருக்கும். வலிமையுள்ள ஆண் பல பெண்களைக் கவர்ந்து கொண்டு அடைத்து வைத்து அனுபவிப்பதும், அழகான பெண் ஒருத்தி பல ஆண்களை நாயகர்களாகப் பெறுவதும் சகஜமாக நிகழ்ந்திருக்கும். இதனால் பலமான ஆண்களுக்குப் பல மனைவிகளும், அழகான பெண்களுக்குப் பல புருஷர்களும், கிடைக்க வசதியிருந்ததே தவிர. நோஞ்சான்கள், பலமற்றவர்கள், ஆள் துணையற்றவர்கள், பொருள் இல்லாதவர்கள் போன்ற ஆண்களுக்கும், அழகற்ற, பணமற்ற பெண்களுக்கும் துணை கிடைப்பது கஷ்டமாக இருந்திருக்கும் என யூகிப்பது சிரமம் அல்ல.

இதைத் தவிர்க்கவே, ஒவ்வொரு ஆணுக்கும் ஒவ்வொரு பெண்ணை மட்டுமே வாழ்க்கைத் துணைவியாக்க வேண்டும், ஒவ்வொரு பெண்ணுக்கும் எப்படியும் ஒரு ஆண் துணை ஏற்படுத்தியாக வேணும் என்ற அவசியக் கட்டுப்பாடு—கல்யாணம்—அமுலுக்கு வந்தது என்று கொள்ளலாம். சமூக வளர்ச்சியின் அவசியம் கருதி எழுந்த ஏற்பாடு இது.

வலிமையும், பல மனைவிகளைக் காப்பாற்றும் வசதிகளும் பெற்றவர்கள் பல பெண்களைக் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்ற சலுகையும் இருந்து வந்திருக்கிறது. பெண்கள் குறைவாகவும் புருஷர்கள் அதிகமாகவும் உள்ள சமூகங்களில் ஒரு பெண்ணே பல புருஷர்களை மணந்து கொள்ளும் உரிமை இருக்கவே இருக்கிறது.

ஆகவே, சமூகம் என்கிற கன்ட்ரோலர் 'இந்தப் பெண் தான் உனக்கு. இந்த ஆண் கூடத் தான் நீ வாழ வேண்டும்' என்று அவசியத்துக்கு ஏற்ப ஆணுக்கும் பெண்ணுக்கும் ரேஷன் செய்து அளிக்கிற பெர்மிட் தான்—லைசென்ஸ் தான்—கல்யாணம் என்று கூறலாம். ஆனாலும், எப்பவுமே 'பிளாக் மார்க்கெட் பிஸினஸ்' சர்வ வல்லமை பொருந்தியதாக இருப்பதனாலே, கல்யாணப் பெர்மிட் பல முறை வெறும் பேச்சாகப் போய் விடுகிறது அவள் இஷ்டம் போல் கெட்டலைவதிலும், அவன் ஊர்ப் பெண்களிடம் விளையாடுவதிலும் ஈடு பட்டு விட முடிகிறது.

கல்யாணம் இன்பம் கொடுக்கும் சாதனம் என்பது மாறி இன்பத்தைக் கெடுத்து வாழ்வைச் சீரழிப்பதாகி விடுகிறது பெண்களில் பல 'வாழா வெட்டி' களையும் விபசாரிகளையும் சிருஷ்டித்து விடுகிறது. ஆண்களின் குணத்தையும் நலத்தையும் கெடுத்து விடுகிறது. இதனால் சமுதாய நலமே பாதகமடைந்து வருகிறது.

இதன் காரணம் என்ன?

எவ்வளவோ!

மனப் பொருத்தமில்லை அதன் அடிப்படை உடற் பொருத்தம் சரியாகயில்லை அதனால் மணத்திலே இன்பம் பொருந்தவில்லை இருவரும் பிணங்குகிறார்கள். மணத்தின் மூலம் இன்பம் பெறாதவர்களின் மனம் வேறு ஜோடி தேடி இன்பம் நாடத் தவிக்கிறது.

இந்தத் திருப்தி யின்மை, பொருத்த மின்மைகள் முக்கிய காரணம் தான் எனினும் வாழ்விலே மாறுபாடு எழ இவையே தனி முதல் முழுக் காரணமாகிவிட முடியாது. மனதையும் சுற்றுச் சார்பையும் பொறுத்திருக்கிறது மணம் இன்பமாக மாறுவதும், மங்குவதும்.

ஒரு பெண் இருக்கிறாள் அவள் கணவன் அவளுக்கு ஏற்றவன். அழகன். 'கலவி மதனைப் போலே குலவி முத்தம் தந்து' இன்பமளித்து இன்பம் பெறுபவன். சில வருஷங்கள் இனிமையாகக் கழிகின்றன. அவள் பார்வையில் வேறொருவன் படுகிறான். காந்தமாகத் திகழ்கிறான். அவள் கால் கட்டை விரலையே பார்க்கும் பத்தினியாக இருப்பதில்லை. சமயம் கிடைத்தால் அவனுடன் ஓடிப் போகவும் தயாராகிறாள். ஏன்?

மனதுக்கு உகந்த அழகிய பெண்ணை காதலித்து கல்யாணம் செய்து வாழ்விலே சொர்க்க இன்மை கண்டு வரும் ஆண் திடீரென வேறு மலர் மீது தாவும் வண்டாகிறான். தொழிற் காரியைத் தேடித் திரிகிறான். மனைவியிடமும் அன்பாக இருக்கிறான். அது ஏன்?

காதலித்துத் தம்பதிகளான ஜோடி மனம் பிணங்கிப் பிரிந்து இஷ்டம் போல் அலைவதும் சகஜமாக இருக்கிறது நாட்டிலே. ஏன்?

எங்கோ இருந்த அவளையும் எப்படி யெப்படியோ வாழ்கிற அவனையும் பெற்றோர்கள் சேர்த்து வைக்க, அறிமுக மற்ற அந்தப்பெண்ணும் ஆணும் ஒன்றுபட்டுச் சுமுகமாக வாழ்வுப்பாதையில் வெற்றிகரமாக முன்னேறுகிறார்கள். இப்படி இன்ப வாழ்வு வாழும் பலரையும் காணமுடிகிறது. இது எப்படி சாத்திய மாயிற்று?

இவையும் இவை போன்ற எண்ணிலாப் பிரச்னைகளும் இருக்கின்றன ஆராயத்துணிகிறவர்களுக்கு. ஆராய்ச்சிக்கு உரிய சுவையான விஷயங்கள் தான் இவை. இவற்றின் அடிப்படை, மனோதத்துவம், செக்ஸ் ஈடுபாடு, மனித குணப் பண்பாடுகள் ஆகியவைதான்.

வாழ்வுக் கொடியிலே பருவத் தென்றலின் வருடுதலால் இன்ப மணம் திகழ்கிறது.

அதற்கு முன்பு வரை ஆண் கண்டபடி கனவுகள் கண்டு வந்திருப்பான். பெண்ணும் 'எப்போ வருவாரோ ?' என்று ஏங்கித் தவித்திருப்பாள்.

தனக்கு வரப்போகும் மணமகள் எப்படி இருக்க வேண்டும் என்று ஆண்மனம் தானாகவே கோட்டை கட்டுகிறது. தனக்கு வசீகரமாகத் தோன்றும் சினிமா நட்சத்திரம் போல் இருக்கலாம்; ரயிலிலோ பஸ்ஸிலோ, வீதியிலோ, பள்ளிக்கூடத்திலோ, வேறோர் கல்யாண வீட்டிலோ—எங்கோ எப்பொழுதோ கண்ட எவளாவது ஒரு பெண்ணை மாதிரி இருக்க வேண்டும் தனக்கு வரும்வாழ்க்கைத் துணைவி என்று இளம் உள்ளம் நினைக்கிறது. எதிர் வீட்டுப் பெண் மீதும் பக்கத்துவீட்டுப் பாவை மீதும் பார்வையும் ஆசையும் பாய்கிறது. இவ்விதம் பெண்ணைப் பார்ப்பது சிரிப்பது, கண்ணடிப்பது, கேலி பேசுவது, லீலைகளாடத் துணிவது எல்லாம் சிறு பிள்ளை விளையாட்டுகளாக ஒதுக்கப்பட்டு விடுகின்றன கல்யாணம் என்கிற தடையினால்—தார்மீகக் கட்டுப்பாட்டினால்.

பெண்ணும் அப்படித்தான். தனக்குத்தெரிந்த அழகன் எவனையாவது போல, தன் மனம் தொட்ட சினிமா நடிகன்போல், தனது உறவினன் ஒருவன் போல், தனக்கு வாய்க்கும் மணாளன் அழகனாய், தன் மீதே பூரண அன்பும் செலுத்துகிறவனாய் தன்னை இன்புறுத்துபவனாய், தனது வாழ்வில் மகிழ்வு மணம் என்றும் திகழச் செய்கிறவனாய், தன் ஆசைகளை அன்புடன் நிறைவேற்றுபவனாக இருக்க வேண்டும் எனக் கனவு காண்கிறாள். அத்தகைய அன்பன் வரவுக்காகப் பெருமூச் செறிந்து காத்திருக்கிறாள்.

ஆண்கள் நண்பர்களோடு தங்களுக்கு வரும் மனைவி எப்படியிருப்பாள், எப்படியிருக்கவேண்டும் என்று பேசி மகிழ்கிறார்கள். மணமானதும் முதன் முதலில் மனைவியுடன் எவ்விதம் பேசிப் பழகுவது என்று மனத்திரையில் ஒத்திகை பண்ணிக் கொள்கிறார்கள். ஆனால், அநேகமாக அவர்கள் ஆசை அனைத்தையும் தகர்த்தெறிவதாகவே அமைகிறது கல்யாணம்.

கன்னியர் ஒத்த வயதுக் குமரிகளாகக் கூடினால் வாலிபர்களைப் பற்றியும், தங்கள் தோழியர்களின் மண வாழ்வு பற்றியும் பேசி, தங்களுக்குள் கேலி செய்து, மன அரிப்பை வளர்த்து வந்தாலும், கல் யாணம் அவர்கள் ஆசையில் மண்ணைப் போட்டு விடுகிறது.

எங்கோ இருந்த ஒருவனையும், எங்கோ இருக்கிற ஒருத்தியையும் வாழ்வு முழுதும் ஒன்று பட்டு, வாழ்க்கை நடத்தி, இஷ்டம் போல் உழன்று, சந் தர்ப்பத் தொல்லைகள்'—தவிர்க்க முடியாத விபத்து கள்—என்று எண்ணும்படியாகப் பிறக்கும் குழந்தை களை வளர்த்து, குடும்பம் பெருக்கி, அவற்றின் பாது காப்புக்கு பொருள்தேட அலைந்து, கவலை வளர்த்து அதனால் அமைதி குலைத்து, மனோ திருப்தி இழந்து, தங்கள் வாழ்வையும் வேறு பலர் வாழ்வையும் சிரழித்து, மண்ணாகும்படி செய்கிற 'குறளி வித்தை' தான் கல்யாணம்—இன்றைய நிலையிலே!

ஆதலின், அவன் என்ன தான் மன்மதனாக, அர்ஜுன ரசனை வளர்த்து அலைந்தவனாக இருந் தாலும், அவள் ரதியாகவும், காமக் கலைவாணியாக வும் இருந்தாலும் கல்யாணம் நெருக்கடியான பரிட்சையாகத் தான் அமைகிறது. அக்னிப் பரிட் சையான அது சிலரை புடமிட்ட தங்கமாசகுகிறது. பலருக்கு வாழ்வைக் கறுக்கும் விஷப் பரிட்சையாகி விடுகிறது.

பெரியோர்களால் ஜோடி சேர்த்து விடப்படும் அவனும் அவளும் புதுமோகத்திலே, இளமைத் துடிப்பிலே, சிறு பிராயவிளையாட்டுத் தவிப்பிலே, பருவத்தின் இன்பக் கிளுகிளுப்பிலே மயங்கி, தங்களை மறந்து, சூழ்நிலை மறந்து, உலகையே மறந்து—தாங்களே உலகம், வாழ்வு மிக இனிமையானது என மயங்கி—இன்ப மைனுக்களாகத் திரியலாம். பிறகு மோகம் தீர்ந்து விழிப்புற்று நோக்கும்போது பரஸ்பரம் அலுப்பும் வெறுப்பும் அதனால் கசப்புமே ஏற்படுகின்றன. இந்த மோகம் கலைந்த விழிப்பும் நெருக்கடியும் சில தம்பதிகளுக்கு பல வருஷங்கள் கழித்து ஏற்படலாம். பலருக்கு பலமாதங்களிலேயே நிகழலாம். சிலருக்கு சில தினங்களிலும், சிலருக்கு 'முதல் இரவு' முடிந்த மறுநாளிலும் கூட ஏற்பட்டு விடலாம். எப்படியும் இந்த நெருக்கடி பிறக்கவே செய்கிறது.

இதன் பயனாக மேல் நாடுகளில் விவாக ரத்துக் கள் பெருத்து வருகின்றன. கீழ்திசை நாடுகளில் குடும்பச் சிதைவும், 'தள்ளிவைத்தல்' வாழாவெட்டி யாகுதல் முதலியனவும் மலிகின்றன. விவாக ரத்து உரிமை இப்போது சட்டமாகி விட்டதால், இங்கும் இனி ரத்து வழக்குகள் அதிகமாகும் என்பதில் ஐயம் கிடையாது. இந் நிலை காரணமாக, மறைமுக விபசாரம் வளர்கிறது. 'ஹிஸ்டீரியா' நோயும், வேறு பயங்கர வியாதிகளும் தற்கொலைகளும் பல்கி வருகின்றன.

ஆணும், பெண்ணும் மரப்பாச்சிகளோ, ஸெலு லாயிட் பொம்மைகளோ அல்ல—சும்மா விளை யாட்டுப் போக்கில், சிறு பிள்ளைத்தனமாக, ஒன்று சேர்த்து தனி அறைகளில் தள்ளிவிடவும், பின் வாழ்வு பூராவும் ஒன்ருக வாழும்படி நிர்ப்பந்தப் படுத்தப்படவும்

ஆனால் நடைமுறை அப்படித் தானிருக்கிறது. சிறுபிள்ளைகள் மரப்பாச்சியையும் செலுலாயிட் பொம்மையையும் இணைப்பது போல—களி மண் உருவையும் ரப்பர் பொம்மையையும் சேர்த்து வைப்பது போலவே—யுவனுக்கும் யுவதிக்கும் தங்கள் மனம் போன போக்கில் கல்யாணம் முடித்து வைக்கிறார்கள் பெரியவர்கள். அவர்கள் நோக்கம் வேறாக இருக்கிறது. ஆதலால் மனித வாழ்வை, சமுதாய நலனை, உயிர்க்குல வளர்ச்சியையே நாசமடிக்கிறார்கள்.

இன்றைய நிலையிலே கல்யாணம் இன்பலோகத்தின் ஆசாரவாசலாக இல்லை. ஆனந்தப் பூங்காவினுள் செல்ல அனுமதிக்கும் இன்பச்சீட்டாக இல்லை. ஆனால், துயரப் பள்ளத்திலே தலைகுப்புறப் பிடித்துத் தள்ளுவதாக உள்ளது. மேலே பசுமை போர்த்து உள்ளே பயங்கரப் பாழ்மை பதுக்கி மேலே பகட்டாகச் சிரிக்கும் பேழ்வாய் போல் இருக்கிறது. இதனால் ஆணும் பெண்ணும் இஷ்டம் போல் திரிய வகை செய்யும் பாஸ் போர்ட்டாக மிளிர்கிறது கல்யாணம்.

ஆயினும், இம் மாதிரிக் கல்யாணங்களில் கூட, தப்பித் தவறி இன்பம் கிட்டி விடுகிறது. எத்தனையோ ஜோடிகள் இன்ப வாழ்வு காணவும் முடிகிறது. அவன் யாரோ, அவள் யாரோ என்று 'ஆராரோ ஆரிராரோ' பாட வேண்டிய தன்மையிலே சந்திக்கும் இருவரும் சுமுகமாக, மனோகரமாக வாழ முடிகிற தென்றால் அதற்கு மனநிறைவு தான் காரணம். இவர்களது மனநிறைவு வாழ்வில் குறுக்கிடும் மேடுபள்ளங்களைச் சமன் செய்து விடுகிறது. சிறு குறைகளை கவனிக்கத் தூண்டுவதில்லை. பெருந் தவறுகளை பெரிது படுத்த விடுவதுமில்லை. மறந்து, மன்னிக்கும் மனப்பண்பை வளர்க்கிறது குணநிறைவு.

மணவாழ்க்கை கேவலம் வெறும் ஜோடி சேரும் பொம்மலாட்டம் அல்ல காமக்களியாடல்களுக்கு மட்டுமே உரிய லீலை யல்ல. குற்றப்பத்திரிகை வாசிக்க அமையும் நீதி மன்றமல்ல. ஸ்டன்டுகளுக்கும் வக்கிர வேடிக்கைகளுக்கும் திறப்பு விழாச் செய்யும் சர்க்கஸ் அல்ல. பம்மாத்தும் பசப்புதலும் ஏய்த்தலும் ஏமாற்றும் நிறைந்த சினிமா அல்ல.

---

இந்த ரகமான பல்வேறு பண்புகளின் சாயை படிந்திருக்கலாம். என்றாலும் அவனும் அவளும் இன்பமாக மகிழ்வோடு அமைதியுடன் வாழ வேண்டுமானல், ஒரு கோணத்தை மட்டும் கண்டு அழுத்தமாக நின்று புழுங்கிப் பொருமுதல் கூடாது. சில சமயங்களில் 'கண்டும் காணாதது போல்' போக வேண்டிய அவசியம் எழும். பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் தாராளமும் வேண்டும்.

கணவன் அறிவு, உணர்ச்சி, சிந்தனை இவற்றின் தொகுப்பு. மனைவி உணர்ச்சிகளின் உயிர்ப்பு. இவ்விருவர் வாழ்விலும் மனம் என்கிற தத்துவம் எவ்வளவோ சித்து விளையாடல்கள் புரிகிற மாயா ஜாலம். குறைகளை மறந்து நிறைவுகளை வளர்க்கும் பண்பை அளிக்கக் கூடியது களங்கமிலா அன்புதான்.

பெரியவர்களாகப் பார்த்து ஜோடி சேர்த்து விடுகிற கல்யாணம் மட்டுமே படுமோசமாகி விடுகிறது என்று குறை கூற முடியாது.

கண்டதும் காதல், காணமலே காதல், கேட்டதும் காதல், கேளாமலே காதல், கார்டு கவர் மூலம் காதல், தந்திக் காதல், டெலிபோன் காதல், போட்டோக் காதல்—இன்னும் எத்தனை எத்தனை

ரகமான காதல்கள் உண்டோ, அவற்றின்படி நடக்கிற கல்யாணங்கள் கூட நிரந்தர இனிமை பயப்பதாக இல்லை.

காதல் என்பது காமத்தின் மேல்பூச்சு. காமம் என்கிற தேக இச்சையின், சதை அரிப்பின் ஆசைக்குக் கவியான பெயர் தான் காதல். அது தெய்வீகம், புனிதம், அமரத்துவமானது என்பதெல்லாம் சுத்த ஹம்பக். வீண் பேத்தல்.

இத்தகைய மயக்க நிலையிலே நிகழும் கல்யாணங்கள் அரிப்பு தீர்ந்து போதை தெளிந்ததும், மனப் பிணக்கில் இறங்கி, முறிந்து போகின்றன. இதனுல் தான் விவாகரத்துகள் அதிகமாகின்றன.

நம் நாட்டில் அவனும் அவளும் பிணைக்கப் பட்டால் என்றும் இணைந்தே போக வேண்டும் என்ற தார்மீகச் சட்டம் கல்யாணத்தின் மூலம் வலியுறுத்தப் படுவதால், மனப் பிணக்கு ஏற்பட்டாலும் குடும்பத்திலே 'கொண்டு செலுத்த' வேண்டிய நிலை நீடிக்கிறது. சில குடும்பங்களில் புருஷனும் மனைவியும் நாயும் பூனையுமாக வாழ்வதும் இந் நெருக்கடியினுல் தான்!

விவாக ரத்து உரிமை வேண்டியது தான். ஆனுல், அமெரிக்கா (ஹாலிவுட்) அனுஷ்டான முறை வேண்டாம். அது தனி மனித வாழ்வை சீர்கேடடையச் செய்கிறது. சமூக வாழ்வில் மனிதத்தனம் மேலும் மேலும் கெட்டு, குடும்ப வாழ்வு குட்டிச் சுவராய் போகும்படி செய்கிறது

தாம்பத்ய வாழ்வு இன்பமானதாக விளங்க, மனதை மட்டும் திருப்திப் படுத்தினுலும் போதாது. உடல் திருப்தியை மட்டுமே முக்கியமானதாகக் கருதினுலும் சரிப்படாது. அவனும் அவளும் ஒத்த பண்பினராக அமைய வேண்டும்.

பொதுவில் அப்படி அமைவதில்லையென்றால், 'பெண்பார்க்கும்'—'மாப்பிள்ளை தேடும்' பெரியவர்கள் செய்கிற தவறுதான் காரணம். சில சமூகங்களில் 'பெண் பார்த்தல்' என்ற வழக்கம் வெறும் கேலிக் கூத்தாகவும் கண்துடைப்பு ஆகவும் உள்ளது. பல இனத்தார்களிடையே இந் நாடகம் இல்லவே இல்லை.

இளைஞனின் விருப்பங்களை, அவனது மனப் பரிபக்குவங்களை, உடல்—குண—நலங்களை ஆராயாமலே எவளையாவது பிடித்து கல்யாணம் செய்து வைப்பதும், பெண்ணின் தன்மைகளையும் தவறுகளையும் ஆசைகளையும் உணராமல் பணத்துக்கும் படாடோபத்துக்கும் அந்தஸ்துக்குமென்று எவனுக்காவது மணம் செய்வதும் வாழ்வைப் பாழடிக்க உதவும் கொடி யேற்று விழா தான்.

யுவனும் யுவதியுமாகப் பார்த்து, தாங்களே முடிவு பண்ணிக்கொள்வது கூட விபரீதங்களில் முடிவது உண்டு. 'நான் உனைமறவேன்........நான் உனைப்பிரியேன். நாம் கல்யாணம் செய்து கொள்வோம்' என்று சத்தியம் செய்து தனியாகக் கூடி இன்புற்று' பின் அவள் வயிற்றிலே பாரம் ஏறியதும் அவளைத் தெருவிலே திண்டாட விட்டு விட்டு அவன் ஓடிவிடுகிற கயவாளித்தனங்களாகவே மலர்கின்றன இவ்விதத் தொடர்புகள். இதனால் குழந்தைக் கொலைகளும், தற்கொலைச் சாவுகளும் பெருகி வருகின்றன.

பலவகைகளையும் யோசிக்கும்போது, பெரியவர்கள் தம் பொறுப்பை உணர்ந்து, சகலவற்றையும் ஆராய்ந்து தேர்ந்து நடத்தி வைத்து அவசியமான கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக்கி வாழ்வு வகுத்துக் கொடுக்கும் கல்யாண முறையே நல்லது என்று எண்ணத் தோன்றுகிறது. இம்முறை அவனுக்கும்

அவளுக்கும் பொறுப்பு உணர்ச்சியையும் இணைப்பையும் உண்டாக்குகிறது. அவனும் அவளும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து கொண்டு, பரஸ்பரம் மகிழ்வு பெறும் தன்மையில் வாழ்ந்து, சுயநலத்தைச் சிறிது அகற்றி, மன நிறைவுடன் காலம் தள்ளும் போது, வாழ்வில் இன்பம் கிட்ட இடமேற்படுகிறது. பழகப் பழக முதிரும் நட்புபோல இவர்களும் வாழ்வில் நல்ல துணைவர்களாக அன்போடுவாழ முடியும்.

ஆமாம். வாழமுடியும் என்பது சரிதான். ஆனால், வாழ்க்கை இப்படி இருக்கிறதா என்ற கேள்வி எழவே செய்யும்.

கல்யாணம் வாழ்வுப் பிரச்னை, ஆணும் பெண்ணும் இன்பமாக வாழச் செய்து கொள்கிற ஒப்பந்தம் என்பதை மறந்து, வெறும் கேலிக் கூத்தாகவும், சிறுபிள்ளை விளையாட்டுப் போலவும் மாறியுள்ள நிலையிலே, உண்மையான அன்பும் ஆர்வமும் அற்றவர்கள் நீடித்த நட்புடன் நற்றுணைவர்களாக வாழ்வது எப்படி? அவர்கள் அவ்விதம் வாழ முடியும் என்று எப்படி எதிர் பார்க்க முடியும்?

சில சமயங்களில், கல்யாண தர்மப்படி கணவன் மனைவியாகி விட்டவர்களிடையே நிலவும் தாம்பத்ய உறவை விட கல்யாணம் செய்து கொள்ளாமலே இஷ்டம்போல் சேர்ந்து வாழ்கிறவர்களின் 'வைப்பு' உறவிலே, ஆண் பெண்ணிருவரிடமும் ஆழ்ந்த உறவும் தூய அன்பும் மிளிர்வதை வாழ்வில் காண முடிகிறது.

அன்புக் கொடி தழுவாத மணவாழ்வை விட, அன்பு துளிர்த்து மலர்ச்சியுற்று விகசிக்கிற கூட்டு வாழ்வு எவ்வளவோ சிறந்தது. ஆணும் பெண்ணும் ஜோடி சேர்வதிலே—சேர்த்து விடப் படுவதிலே—முதலிலேயே எல்லாவித நோக்கிலும் ஆராய்ந்து

இணைத்திருந்தால் உண்மை அன்பு பூத்து வாழ்வு மணமுள்ளதாக இடம் உண்டு.

இன்று கல்யாணம் வாழ்க்கை நலனை பாதிக்க வாய்த்த திட்டமாக மாறிவிட்டது போலவே, நல்லதுக்காக அமைந்த கட்டுப்பாடுகள் பலவற்றுடனும் அநாவசியமான தர்ம நியாயங்கள் பலப்பல சேர்ந்து அனைத்தையும் மோச நாச விதிகளாக மாற்றி விட்டன.


'கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிரு. பார்த்துக் கேட்டு தீர்க்கமாக யோசித்துத்தான் முடித்து வைக்க வேணும்' என்ற பேச்சுக்குக் குறை வில்லை. ஆனால் நடப்பது நேர்மாறாகத் தான்.

குறைபாடுகளை கவனியாமல் 'எல்லாம் பழகப் பழகச் சரியாகி விடும்' என்று அலட்சியம் செய்து விடுகிறார்கள். அதனால் மனித வாழ்வு தேடிச்சோறு நிதம் தின்று, பின் கூடிப்பேசி மகிழ்ந்து உறங்கி, 'பிள்ளையோ பிள்ளை' என்று பெற்றுத்தள்ளி உழலும் பரிதாபகரமான வேதனை வாழ்வாகவே போய் விட்டது. பெரும்பாலோர் மனித மிருகங்களாகத் தான் வாழ்கிறார்களே தவிர, நல்ல மானிடராக வாழவில்லை.

மனிதர்களாக வாழட்டும் மக்கள்; மனித சமுதாயம் உயர் நிலை எய்தட்டும் என்று விரும்புகிற சிந்தனையாளர்கள், முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையான சமூகக் கட்டுப்பாடுகள், தார்மீக முறைகள் எல்லாமே அழிக்கப்பட வேண்டும்; புதியதோர் சமுதாயமுறை பூக்க வேண்டும் என்று விரும்புவதில் தவறில்லை.

மனிதகுல வாழ்வு மாண்புற, சமுதாய வாழ்க்கை சிறப்புற, தனிமனித வாழ்வு நலம் பெற, வாழ்வின் முக்கிய பிரச்னையான கல்யாணமும் கல்யாண முறைகளும் சரியான முறையிலே அமைக்கப்படுதல் அவசியம்.

கல்யாணம் வாழ்வின் இனிமையைக் கெடுப்ப தாக இருக்கக் கூடாது. வாழ்விலே இன்பமும் மணமும் வளமும் நல்குவதாக அமையவேண்டும். இளைஞர்களும் பெரியவர்களும் அதற்கு ஆவன வற்றை கவனிக்க வேண்டும்.



# வல்லிக்கண்ணன்

எழுதியவை:

| | | |
|---|---|---|
| விவாகரத்து அவசியம்தானா? | ... | ரூ. 0–3–0 |
| கல்யாணத்துக்குப் பிறகு காதல் புரியலாமா? | ... | ,, 0–3–0 |
| நல்ல மனைவியை அடைவது எப்படி? | ... ... | ,, 0–3–0 |
| கல்யாணம் இன்பம் கொடுப்பதா? இன்பத்தைக் கெடுப்பதா? | ... | ,, 0–3–0 |

விற்பனைக் கழிவு 25% — அனுப்பும் செலவு இனும்

பிரசுரம்:

**எம். சூரி**

**14-ஏ, குப்பையர் தெரு, சென்னை-1.**